# பின்னிணைப்பு 1

# முக்கிய பொருளாதாரக் கொள்கை மாற்றங்களும் வழிமுறைகளும்: சனவரி - ஒத்தோபர் 2016[1]

## உண்மைத் துறை[2]

2016 பெப்புருவரி 01 - உள்நாட்டு அழைப்புக்கள் மற்றும் குறுந்தகவல் பணிகள்/ பல்லூடகத் தகவல் பணிகள் என்பனவற்றுக்கான தாழ்மட்டப் பெறுமதியானது பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது.

| வகை | நிமிடமொன்றிற்கான தாழ்ந்தமட்ட பெறுமதி (ரூபா.) |
|---|---|
| உள்நாட்டு அழைப்பு (நிமிடமொன்றுக்கான பட்டியல் அடிப்படையில்) | 1.50 |
| உள்நாட்டு அழைப்பு (செக்கனொன்றுக்கான பட்டியல் அடிப்படையில்) | 1.80 |
| குறுந்தகவல் பணிகள்/ பல்லூடகத் தகவல் பணிகள் | 0.20 (தகவல் ஒன்றுக்கு) |

2016 யூலை 14 - குறிப்பிட்ட சில பொருட்களின் ஆகக்கூடிய சில்லறை விலையானது பின்வருமாறு நிர்ணயிக்கப்பட்டது.

- மைசூர் பருப்பு (சிவப்பு மைசூர் பருப்பு) கி.கி ஒன்றிற்கு ரூ. 169 இல்
- நெத்தலிக் கருவாடு (தாய்லாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது ) கி.கி ஒன்றிற்கு ரூ.495 இல்
- நெத்தலிக் கருவாடு (துபாயிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது) கி.கி ஒன்றிற்கு ரூ. 410 இல்
- கடலை கி.கி ஒன்றிற்கு ரூ. 260 இல்
- பாசிப் பயறு கி.கி ஒன்றிற்கு ரூ. 220 இல்
- தேறிய நிறை 425 கிராம் அல்லது காய்ந்த நிறை 280 கிராம் கொண்ட தகரத்திலடைக்கப்பட்ட மீன் ஒன்றிற்கு ரூ. 140 இலும் தேறிய நிறை 155 கிராம் அல்லது காய்ந்த நிறை 105 கிராம் கொண்ட தகரத்திலடைக்கப்பட்ட மீன் ஒன்றிற்கு ரூ. 70 இலும்
- வெள்ளைச் சீனி கி.கி ஒன்றிற்கு ரூ. 95 இல்
- கோதுமை மா கி.கி ஒன்றிற்கு ரூ 87 இல்
- முழு ஆடைப் பால்மா (இறக்குமதி செய்யப்பட்டது) 400 கிராம் பொதியொன்று ரூ. 325 இலும் 1 கி.கி பொதியொன்று ரூ. 810 இலும்

1 இது 2016 சனவரியிலிருந்து ஒத்தோபர் வரையான காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய பொருளாதாரக் கொள்கை மாற்றங்கள் மற்றும் அளவீடுகளை உள்ளடக்குகின்றது. அறிவிக்கப்பட்டு 2016இன் எஞ்சிய காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் கொள்கை மாற்றங்களும் வழிமுறைகளும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

2 உண்மைத் துறை அபிவிருத்திக்காக வழங்கப்பட்ட இறை ஊக்குவிப்புக்களின் விபரங்கள் இறைத் துறைகளின் கீழ் கொள்கை வழிமுறைகளாக உள்ளடக்கப்பட்டுள்ளன.

- முழு ஆடைப் பால்மா (உள்நாட்டு) 400 கிராம் பொதியொன்று ரூ. 295 இலும் 1 கி.கி பொதியொன்று ரூ. 735 இலும்
- குளிரூட்டப்பட்ட அல்லது பதனிடப்பட்ட இறைச்சிக் கோழி (முழுக் கோழி) தோலுடன் ரூ. 410 இலும் தோல் நீக்கியது ரூ. 495 இலும்
- உருளைக்கிழங்கு (இறக்குமதி செய்யப்பட்டது) கி.கி ஒன்றிற்கு ரூ.120 இல்
- பெரிய வெங்காயம் (இறக்குமதி செய்யப்பட்டது) கி.கி ஒன்றிற்கு ரூ.78 இல்
- காய்ந்த மிளகாய் (தூளாக்கப்படாத அல்லது அரைக்கப்படாதவை) கி.கி ஒன்றிற்கு ரூ.385 இல்
- கருவாடு - கட்டா கி.கி ஒன்றிற்கு ரூ. 1,100 இல்
- கருவாடு - சாளயா கி.கி ஒன்றிற்கு ரூ. 425 இல்
- சஸ்டோஜன் 400 கிராம் பொதியொன்று ரூ. 1,500 இல்
- மாசிக் கருவாடு கி.கி ஒன்றிற்கு ரூ. 1,500 இல்

2016 ஓகத்து 01 - பயணிகள் பேரூந்துக் கட்டணம் 6 வீதத்தினால் அதிகரிக்கப்பட்டது. குறைந்தபட்ச பேரூந்துக் கட்டணம் ரூ.8 இலிருந்து ரூ.9 ஆக அதிகரிக்கப்பட்டது.

2016 ஒத்தோபர் 21 - 2016ஆம் ஆண்டில் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை (விலைகளின் மீதான உச்சவரம்பு) விதிமுறை இல 2 தெரிந்தெடுக்கப்பட்ட 48 மருந்துப் பொருட்களின் அதியுச்ச சில்லறை விலைகள் மீது விதிக்கப்பட்டது.

## வெளிநாட்டுத் துறை

### வர்த்தகமும் தீர்வையும்

2016 சனவரி 21 - மாசிக் கருவாடு, நெத்தலிக் கருவாடு, பாசிப்பயறு, உழுந்து, மிளகாய், கொத்தமல்லி, மஞ்சள், உழுத்தம் மா, தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் போன்றவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை ஆறு மாத காலப் பகுதிக்கு நீடிக்கப்பட்டது.

2016 சனவரி 29 - சோளம் மற்றும் இறுங்கு இறக்குமதி மீதான 10 சதவீத சிறப்புப் பண்டத்தீர்வை 29 பெப்புருவரி 2016 வரை நீடிக்கப்பட்டது.

- மரக்கறி கொழுப்புக்கள் மற்றும் எண்ணெய்கள் மற்றும் அவற்றின் பகுதிகள் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை கி.கி ஒன்றிற்கு ரூ. 175 ஆனது 28 ஏப்பிறல் 2016 வரை நீடிக்கப்பட்டது.

2016 பெப்புருவரி 01 - அரிசி இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை கி.கி ஒன்றிற்கு ரூ. 35 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ. 50 ஆக அதிகரிக்கப்பட்டது.

2016 பெப்புருவரி 09 - கோதுமை தானிய இறக்குமதி மீதான முழு சுங்கத் தீர்வை விலக்கானது 15 சதவீதம் அல்லது கி.கி ஒன்றிற்கு ரூ. 10 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ. 4 ஆக குறைக்கப்பட்டது. ஆகவே பிரயோகிக்கக்கூடிய தீர்வை கி.கி ஒன்றிற்கு ரூ. 6 ஆகும்.

| | | |
|---|---|---|
| 2016 மாச்சு 01 | - | உருளைக்கிழங்கு இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை கி.கி ஒன்றிற்கு ரூ. 15 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ. 35 வரை நான்கு மாத காலத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | பெரிய வெங்காயம் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை கி.கி ஒன்றிற்கு ரூ. 5 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ. 25 வரை நான்கு மாத காலத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2016 மாச்சு 08 | - | மெக்கரல் எனும் மீன், பட்டாணி, கொண்டைக்கடலை, தட்டைப் பயறு, குரக்கன், மாஜரீன், சீனி மற்றும் மரக்கறி எண்ணெய் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை ஆறு மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டது. |
| 2016 ஏப்பிறல் 02 | - | கருவாடு, யோக்கட், வெண்ணெய்கட்டி, பாற் பரவற் பொருட்கள், சின்ன வெங்காயம், உள்ளி, உடன் தோடம்பழம், திராட்சைப் பழம், ஆப்பிள், நற்சீரகம், பெருஞ்சீரகம், வெந்தயம், குரக்கன் மா, நிலக்கடலை, கடுகு மற்றும் உப்பு போன்றவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை ஆறு மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டது. |
| 2016 மே 13 | - | மரக்கறி எண்ணெய் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை கி.கி ஒன்றிற்கு ரூ. 20 இனால் ஆறு மாத காலப் பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | 80 சதவீதம் அல்லது அதற்கு அதிகமான கொழுப்பு உள்ளடங்கிய மாஜரீன் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை கி.கி ஒன்றிற்கு ரூ. 175 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ. 195 இற்கு ஆறு மாத காலத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | மாஜரீன் (வேறு) இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை கி.கி ஒன்றிற்கு ரூ. 275 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ. 295 இற்கு ஆறு மாத காலத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2016 மே 21 | - | உடன் அல்லது குளிரூட்டப்பட்ட மீன், மைசூர் பருப்பு (சிவப்பு மைசூர் பருப்பு), மஞ்சள் மைசூர் பருப்பு, பேரீச்சை, நற்சீரகம் போன்றவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை ஆறு மாத காலத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | சின்ன வெங்காய இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை கி.கி ஒன்றிற்கு ரூ. 5 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ. 25 இற்கு ஆறு மாத காலத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | பெருஞ்சீரக இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை கி.கி ஒன்றிற்கு ரூ. 52 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ. 162 இற்கு ஆறு மாத காலத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2016 யூன் 17 | - | மரக்கறி எண்ணெய் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை கி.கி ஒன்றிற்கு ரூ. 20 ஆல் ஆறு மாத காலத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | தாவர எண்ணெய் மீதான சிறப்பு பண்டத் தீர்வையாக கி.கி ஒன்றிற்கு ரூ. 155 ஆனது ஆறு மாத காலத்திற்கு அமுல்படுத்தப்பட்டது. |
| 2016 யூன் 23 | - | டீசல் இறக்குமதி மீது வழங்கப்பட்ட சுங்கத் தீர்வை விலக்கு லீற்றர் ஒன்றிற்கு ரூ. 6 ஆனது நீக்கப்பட்டது. ஆகவே பிரயோகிக்கக்கூடிய தீர்வை லீற்றர் ஒன்றிற்கு ரூ. 15 ஆகும். |

| | | |
|---|---|---|
| 2016 யூலை 01 | - | உருளைக் கிழங்கு, பெரிய வெங்காய இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை மூன்று மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டது. |
| | - | சோளம் மற்றும் இறுங்கு இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை 10 சதவீதமானது மூன்று மாத காலத்திற்கு அமுலாக்கப்பட்டது. |
| 2016 யூலை 15 | - | பால் மா இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை விலக்கு கி.கி ஒன்றிற்கு ரூ. 90 ஆக வழங்கப்பட்டது. ஆகவே பிரயோகிக்கக்கூடிய தீர்வை கி.கி ஒன்றிற்கு ரூ. 135 ஆகும். |
| 2016 யூலை 19 | - | மாசிக் கருவாடு, நெத்தலிக் கருவாடு, பாசிப் பயறு, உழுந்து, மிளகாய், கொத்தமல்லி, மஞ்சள், உழுத்தம் மா மற்றும் தகரத்திலடைக்கப்பட்ட மீன் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை ஆறு மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டது. |
| | - | சீனி இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை கி.கி ஒன்றிற்கு ரூ. 30 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ. 0.25 இற்கு ஆறு மாத காலத்திற்கு குறைக்கப்பட்டது. |
| 2016 ஓகத்து 20 | - | பெரிய வெங்காயம் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை கி.கி ஒன்றிற்கு ரூ. 25 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ. 40 இற்கு ஆறு மாத காலத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2016 ஓகத்து 25 | - | உருளைக் கிழங்கு இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை கி.கி ஒன்றிற்கு ரூ. 35 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ. 40 இற்கு ஆறு மாத காலத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2016 செத்தெம்பர் 08 | - | மெக்கரல் எனும் மீன், பட்டாணி, கொண்டைக்கடலை, தட்டைப் பயறு மற்றும் குரக்கன் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை ஆறு மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டது. |
| 2016 செத்தெம்பர் 15 | - | கோதுமை தானியம் மீதான சுங்கத் தீர்வை விலக்கு கி.கி ஒன்றிற்கு ரூ. 4 ஆனது நீக்கப்பட்டதுடன் கோதுமை தானிய இறக்குமதி மீது பிரயோகிக்கக்கூடிய சுங்கத் தீர்வை 15 சதவீதம் அல்லது கி.கி ஒன்றிற்கு ரூ. 10 ஆனது 15 சதவீதம் அல்லது கி.கி ஒன்றிற்கு ரூ. 12 ஆக அதிகரிக்கப்பட்டது. |
| 2016 செத்தெம்பர் 16 | - | சீனி இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை ஆறு மாத காலத்திற்கு பின்வருமாறு அதிகரிக்கப்பட்டது.<br>- வெள்ளை சீனி கி.கி ஒன்றிற்கு ரூ. 0.25 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ. 2 இற்கு<br>- ஏனைய சீனி கி.கி ஒன்றிற்கு ரூ. 0.25 இலிருந்து கி.கி ரூ. 15 இற்கு |
| 2016 செத்தெம்பர் 30 | - | சிவப்பு மற்றும் மஞ்சள் பருப்பு இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை ஆறு மாத காலத்திற்கு பின்வருமாறு அதிகரிக்கப்பட்டது.<br>- முழு பருப்பு கி.கி ஒன்றிற்கு ரூ. 0.25 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ. 5 இற்கு<br>- உடைத்த பருப்பு கி.கி ஒன்றிற்கு ரூ. 0.25 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ. 10 இற்கு |
| 2016 ஒத்தோபர் 02 | - | கருவாடு, யோக்கட், வெண்ணெய்கட்டி, பாற் பரவற் பொருட்கள், உள்ளி, உடன் தோடம்பழம், திராட்சைப் பழம், ஆப்பிள், வெந்தயம், குரக்கன் மா, நிலக்கடலை, கடுகு மற்றும் உப்பு போன்றவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத்தீர்வை ஆறு மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டது. |

## வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவம்

2016 சனவரி 20 - வதிவற்றோா் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வதிவோா் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வதியும் இலங்கையரல்லாதோா் வெளிநாட்டு நாணயக் கணக்கு மற்றும் வெளிநாட்டு செலாவணி உழைப்போா் கணக்குகளை வைத்திருப்போருக்கு அத்தகைய கணக்குகளின் நிதியங்களை அனுமதியின்றி ஏதேனும் நோக்கத்திற்காக இலங்கைக்கு வெளியே அனுப்புவதனை அனுமதிக்கும் புதிய அறிவுறுத்தல்கள் அதிகாரமளிக்கப்பட்ட முகவா்களுக்கு வழங்கப்பட்டது.

- ஐக்கிய அமெரிக்க டொலா் 10,000 வரையான வெளிநாட்டு நாணயம் அல்லது அதற்கு சமமான வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயங்களை அவன்/ அவள் கையிருப்பில் வைத்திருப்பதற்காக தனிநபா்களை அனுமதிக்கின்ற புதிய வா்த்தமானி அறிவித்தலொன்று வழங்கப்பட்டுள்ளது.

2016 மாச்சு 23 - இலங்கை அபிவிருத்தி முறிகளை பெற்றுக் கொள்ளல், வைத்திருத்தல் மற்றும் பரிமாற்றல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட முகவா் ஒருவரிடமிருந்து ஐக்கிய அமெரிக்க டொலா்களை கொள்வனவு செய்யும் நோக்கங்களிற்காக “இலங்கை அபிவிருத்தி முறிகள் முதலீட்டு கணக்கு” மற்றும் “முறி முதலீட்டுக்கான டொலா் கணக்கு” என பெயரிடப்பட்ட சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகளை ஆரம்பிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட முகவா்கள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகளிற்கு உத்தியோகபூா்வ முகவா்களாக அனுமதிக்கப்பட்ட முதன்மை வணிகா்களை அனுமதிக்கின்ற அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

2016 ஏப்பிறல் 01 - 1993 மாச்சு 26 திகதியிடப்பட்ட 759/15 இலக்க வா்த்தமானி அறிவித்தலில் வழங்கப்பட்ட விதிவிலக்கானது நீக்கப்பட்டதுடன் ஏற்றுமதி செய்யப்பட்ட திகதியிலிருந்து 90 நாட்களுக்குள் வெளிநாட்டில் கைவசம் வைத்திருக்கும் ஏற்றுமதி மீதான பெறுகைகளை நாட்டிற்கு திருப்பியனுப்புவதற்கு ஏற்றுமதியாளா்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனா். மேலும், 2016 மே 01 இற்கு பிந்தாமல் வெளிநாட்டில் கைவசம் வைத்திருக்கும் ஏதேனும் அத்தகைய பெறுகைகளை நாட்டிற்கு திருப்பியனுப்புவதற்கு ஏற்றுமதியாளா்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனா்.

2016 ஏப்பிறல் 19 - இராஜதந்திர அதிகாரியின் விசா சேகரிப்பு கட்டணம் மற்றும் இராஜதந்திர அதிகாரிக்கு சொந்தமான வாகன விற்பனையிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட வருமானத்தினை செலாவணிக் கட்டுப்பாட்டாளருக்கு அறிவிக்காது அனுப்புவதற்கும் பிணையங்கள் முதலீட்டு கணக்கினூடாக இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கும் அனுமதிக்கின்ற இராஜதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் இராஜதந்திர ரூபா கணக்குகள் மீதான அறிவுறுத்தல்கள் அங்கீகரிக்கப்பட்ட முகவா்களுக்கு வழங்கப்பட்டது.

2016 மே 16 - 2013 யூன் 12 இற்கு முன்பு நிரந்தர வதிவிட விசாவினால் இடம்பெயா்ந்த புலம்பெயா்வாளா்கள் தகுதிவாய்ந்த புலம்பெயா் முற்பணங்களிலிருந்து கழிக்கப்படாமல் சேமலாப நிதி மற்றும் பணிக்கொடை நன்மைகள் உள்ளடங்கலாக ஓய்வூதிய நிதிய இலாப நன்மைகள் மற்றும் வட்டி, பங்கிலாபங்கள், ஓய்வூதியம், வாடகை, குத்தகை வருமானம் மற்றும் உள்ளடங்கலாக 2013 யூன் 12 இற்கு பின்பு இலங்கையில் ஈட்டிய நடைமுறை வருமானங்களை தங்களுடைய வதிவற்றோா் தடுத்து வைக்கப்பட்டோா் கணக்கினூடாக அனுப்புவதற்கு அனுமதிக்கப்பட்டனா்.

- இலங்கையில் முதலிடுவதற்காக பிணையங்கள் முதலீட்டு கணக்கிற்கு தகுதிவாய்ந்த புலம்பெயர் முற்பணங்களை மாற்றுவதற்கு புலம்பெயர்ந்தோர் அனுமதிக்கப்பட்டனர்.

2016 யூன் 07 - வெளிநாட்டு மூலங்களிலிருந்து கடன்பெறுவதற்கு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள், உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்ட கம்பனிகள் மற்றும் கரைகடந்த கம்பனிகள் தவிர்ந்த இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளிற்காக புதியதொரு வெளிநாட்டு வர்த்தக கடன்படுகைத் திட்டமொன்று உருவாக்கப்பட்டதுடன் தகுதிவாய்ந்த கடன்படுனர்களின் பெயரில் வெளிநாட்டு வர்த்தக கடன்படுகை கணக்கினை ஆரம்பிக்கவும் தொழிற்படுத்தவும் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களை அனுமதிக்கின்ற அறிவுறுத்தலொன்று வழங்கப்பட்டது.

2016 யூன் 10 - பண கொடுகடன் மற்றும் பிணைய முகாமைத்துவம், மதிப்பீடு மற்றும் தனிநபர்கள் அல்லது தனியார் அமைப்புகளுக்கு ஆலோசனை வழங்கலினை உள்ளடக்கிய பிணையச் சேவையினை வழங்குதல் போன்ற பகுதிகளிலான வெளிநாட்டு முதலீடுகள் மீது காணப்பட்ட கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டது.

2016 செத்தெம்பர் 29 - 2016 ஏப்பிறல் 01 திகதியிடப்பட்ட வர்த்தமானி இல. 1960/66 நீக்கப்பட்டதுடன் ஏற்றுமதி செய்யப்பட்ட திகதியிலிருந்து 120 நாட்களுக்குள் ஏற்றுமதி பெறுகைகளை நாட்டிற்கு திருப்பியனுப்ப ஏற்றுமதியாளர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். ஏதேனும் சட்டமீறலுக்கு எதிரான சட்ட நடவடிக்கைக்கு முன்பாக இலங்கை மத்திய வங்கியினால் 30 நாட்கள் கருணை காலம் வழங்கப்படலாம்.

## இறைத் துறை

### அரச அரசிறை

2016 சனவரி 01 - உந்து ஊர்திகளின் இறக்குமதி மற்றும் விற்பனை வியாபாரத்தில் ஈடுபடும் அனைத்து இறக்குமதியாளர்கள் மீதும் இறக்குமதி உரிமக் கட்டணமாக ஆண்டுக்கு ரூ. 1.5 மில்லியன் விதிக்கப்பட்டது.

- போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளின் மீதான தீர்வையானது லீற்றரொன்றிற்கு ரூ.10 இலிருந்து லீற்றரொன்றிற்கு ரூ. 30 இற்கு அதிகரிக்கப்பட்டது.

- கடனட்டையின் உள்நாட்டுப் பயன்பாட்டுடன் தொடர்பிலான கடனட்டைப் பயன்பாட்டின் மீது அறவிடப்பட்ட 1.5 சதவீத முத்திரை தீர்வையானது நீக்கப்பட்டது.

- வெளிநாட்டுக் கொள்வனவுகளுக்கான கடனட்டைப் பயன்பாட்டின் மீதான முத்திரை தீர்வையானது 2.5 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது.

- எந்தவொரு கம்பனியினதும் எந்தவொரு எண்ணிக்கையிலான பங்குகளின் வழங்கல், மாற்றல் அல்லது ஒப்படைப்பு என்பனவற்றின் விளைவாக ஏதேனும் பங்குச்சான்றிதழ் மீதான முத்திரை தீர்வை நீக்கப்பட்டது.

- புறப்படுகைத்தீர்வை பின்வருமாறு அதிகரிக்கப்பட்டது.

  - இலங்கையிலிருந்து விமானத்தால் வெளிச்செல்லும் ஒருவருக்கு ஐ.அ. டொலர் 25 இலிருந்து ஐ.அ. டொலர் 30 இற்கு

- இலங்கையிலிருந்து கப்பலால் வெளிச் செல்லும் ஒருவருக்கு ஐ.அ. டொலர் 5 இலிருந்து ஐ.அ. டொலர் 30 இற்கு

- கடவுச்சீட்டு மற்றும் இரட்டை குடியுரிமைக் கட்டணம் பின்வருமாறு அதிகரிக்கப்பட்டது.

| | | முன்னையது (ரூ.) | தற்போதையது (ரூ.) |
|---|---|---|---|
| கடவுச் சீட்டுக் கட்டணம் | வயதுவந்தோர் | 7,500 | 10,000 |
| ஒரு நாள் சேவை | சிறுவர் | 3,500 | 5,000 |
| கடவுச் சீட்டுக் கட்டணம் | வயதுவந்தோர் | 2,500 | 3,000 |
| சாதாரண சேவை | சிறுவர் | 1,500 | 2,000 |
| இரட்டை குடியுரிமை கட்டணம் | | 250,000 | 300,000 |

- சார்க் விசா கட்டணம் ஐ.அ.டொலர் 10இலிருந்து ஐ.அ.டொலர் 20க்கு அதிகரிக்கப்பட்டது.

- துறைமுக மற்றும் விமான நிலைய தீர்வை வீதமானது 5 சதவீதத்திலிருந்து 7.5 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது.

- வாகன உரித்து தீர்வை அறிமுகப்படுத்தப்பட்டது.

- வெளிநாட்டினருக்கு நிலத்தினை குத்தகைக்கு விடுவது மீது விதிக்கப்பட்ட வரி அகற்றப்பட்டது.

- கட்டிடக் கைத்தொழில் உத்தரவாத நிதியத் தீர்வையானது அகற்றப்பட்டது.

- சர்வதேச தொலைத் தொடர்பு தொழிற்பாட்டாளர்கள் தீர்வையின் வீதமானது ஐ.அ. டொலர் 9 சதத்திலிருந்து ஐ.அ. டொலர் 12 சதத்திற்கு அதிகரிக்கப்பட்டது.

- இலத்திரனியல் மற்றும் மின்சார கருவிகள் மீது சலுகை அடிப்படையிலான துறைமுக மற்றும் விமான நிலைய தீர்வையான 2.5 சதவீதம் விதிக்கப்பட்டது.

- கட்டிடக் கைத்தொழிலில் பயன்படுத்தப்படும் இயந்திரங்கள், பால் மற்றும் வேளாண்மைக் கைத்தொழில்களானது துறைமுக மற்றும் விமான நிலையத் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

- வெளிநாட்டு மதுபானத்தின் அதிகபட்ச அளவிலான சில்லறை வியாபாரமும் போக்குவரத்தும் 7.5 லீற்றருக்கு மட்டுப்படுத்தப்பட்டது.

2016 மாச்சு 01 - உற்பத்தியாளரால் அளிக்கப்பட்ட விலையை அடிப்படையாக் கொண்ட சுங்க பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்பட்ட சுங்கப் பெறுமதிகளை பயன்படுத்துவதற்கு பதிலாக, மோட்டார் வாகனங்களின் சுங்கப் பெறுமதிகளை கணிப்பதற்கு 2016 மாச்சு 01 இல் வழங்கப்பட்ட இலக்கம் 1956/17 (விடயம் i) வர்த்தமானியால் கீழேயுள்ள (அ) மற்றும் (ஆ) எனும் இரு பதிலீட்டுப் பெறுமதிகளின் உயர்ந்த பெறுமதி பிரயோகிக்கப்பட்டது:

(அ) வாகனத்தின் உற்பத்தியாளரினால் வழங்கப்பட்ட விலையின் அடிப்படையில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்பட்ட வாகனப் பெறுமதி

(ஆ) வாகனத்தின் பட்டியலிடப்பட்ட கப்பலேற்றற் பெறுமதி

2016 ஏப்பிறல் 01 - பொருளாதார சேவைக் கட்டணத்தின் மீதான திருத்தங்கள் பின்வருமாறு செய்யப்பட்டன;

- இலாபம் உழைக்கும் வியாபாரம் மீதான விலக்கல் நீக்கப்பட்டது
- ஒருவருடத்திற்கான ரூ. 120 மில்லியன் அதிகூடிய பொறுப்பு நீக்கப்பட்டது.
- வீதமானது 0.25 சதவீதத்திலிருந்து 0.5 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது.
- 2016 ஏப்பிறல் 01இலிருந்து தொடங்கப்பட்ட ஏதேனும் காலப்பகுதிக்கான செலுத்தக்கூடிய வருமான வரிக்கு எதிராக ஈடு செய்யப்பட வேண்டிய பொருளாதார சேவைக் கட்டணத்தின், முன்னோக்கி கொண்டு செல்லும் காலப்பகுதியானது 5 வருடத்திலிருந்து 3 வருடத்திற்கு குறைக்கப்பட்டது.
- காலாண்டிற்கான மொத்தப் புரள்வு ரூபா 50 மில்லியனாக இருக்கும் பட்சத்தில் பெற்றோல், டீசல் மற்றும் மண்ணெண்ணை போன்றவற்றின் சில்லறை வியாபாரம் பொருளாதார சேவைக் கட்டணத்திற்கு ஏற்புடையதாகும். அத்தகைய வியாபாரத்தின் பொறுப்புக்குரிய புரள்வின் மீதான வரி 1/10இல் கணக்கிடப்படும்.

- கம்பனி வருமான வரி மீதான செய்யப்பட்ட திருத்தங்கள் பின்வருமாறு:

- வங்கியியல் மற்றும் நிதியியல் சேவைகள், காப்புறுதிக் கைத்தொழில் மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் மீது 28 சதவீதம் (ஏனைய பண்டங்களின் விற்பனை சார்ந்த ஏதாவது முதன்மையான ஆயத்தங்கள் உள்ளடங்கலாக)
- மதுபானம், புகையிலை, அதிஷ்டலாபச் சீட்டு மற்றும் பந்தயம் மற்றும் கேளிக்கை விளையாட்டு மீது 40 சதவீதம்
- வேறு செயற்பாடுகள் மீது 17.5 சதவீதம் (வருவாய் மூலங்களில் தங்கியுள்ள வட்டி வருமானம், உரிமைப் பங்கு, பங்கிலாபம் நீங்கலாக)

- தனிப்பட்ட வருமான வரி மீதான திருத்தங்கள் பின்வருமாறு:

- தொழில் வருமானம் மீது அதிகூடிய வீதமான 16 சதவீதமாக வரி விதிக்கப்பட்டதுடன் தொழில் வருமானத்திலிருந்து உழைக்கும் போது செலுத்தும் வரி வீத அட்டவணைகள் 2016 ஏப்பிறல் 01 இலிருந்து ஆரம்பிக்கும் வருடத்தின் மதிப்பீடுகளுக்காக பிரயோகிக்கப்பட்டது.
- ஊழியரின் ஊதியத்திலிருந்து ஒரு ஊழியரின் உழைக்கும் போது செலுத்தும் வரிப் பொறுப்பு கழிக்கப்பட்டதுடன் தொழில் தருநரால் தீர்மானிக்கப்படும் ஊழியரது உழைக்கும் போது செலுத்தும் பொறுப்பை தடுப்பதற்கான ஏற்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

- தனியார் மீது பிரயோகிக்கக்கூடிய அதிகபட்ச வரி வீதமானது;

- நிதியியல் வியாபாரம், மதுபானம், புகையிலை, அதிஷ்டலாபச் சீட்டு மற்றும் பந்தயம் மற்றும் கேளிக்கை விளையாட்டுக்கள் தவிர்ந்த ஏனைய செயற்பாடுகளிலிருந்தான இலாபங்கள் 17.5 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டது.

- நிதியியல் அல்லது வர்த்தக நடவடிக்கையிலிருந்தான இலாபங்கள் 24 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டது. (ஏனைய பண்டங்களின் விற்பனைகள் சார்ந்த தழுவிய ஏனைய முதன்மையான ஆயத்தங்கள் உள்ளடங்கலாக)

- மதுபானம், புகையிலை, அதிஷ்ட லாபம், பந்தயம், கேளிக்கை விளையாட்டு செயற்பாடுகளிலிருந்தான இலாபங்கள் 40 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டது.

- வாடகையிலிருந்தான வருமானம், வருடாந்த தேறிய பெறுமதி மற்றும் ஒத்த வளங்கள் மீது அதிகபட்ச வீதமான 24 சதவீதம் வரை வரி விதிக்கப்படுகின்றது.

- ஏதேயில் மதுபானத்தின் இறக்குமதி மற்றும் உள்நாட்டு வழங்கல் மீதான கலால் வரி அதிகரிக்கப்பட்டது

2016 மே 26 - 25 மே 2016 இல் வெளியிடப்பட்ட வர்த்தமானி இலக்கம் 1968/11 இன் மூலம் 1 மாச்சு 2016 இல் வெளியிடப்பட்ட வர்த்தமானி இலக்கம் 1956/17 நீக்கப்பட்டதுடன் மோட்டார் வாகனங்களின் சுங்கப் பெறுமதி கணக்கீட்டு முறையானது (வகை (ை)) பின்வருமாறு திருத்தப்பட்டது

(அ) புதியரக மோட்டார் வாகனங்களின் கொடுக்கல் வாங்கல் பெறுமதியானது உற்பத்தியாளரால் வழங்கப்படும் பட்டியலுடன் நிரூபிக்கப்படல் வேண்டும் அல்லது அத்தகைய வாகனங்களின் உற்பத்தியாளரால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

(ஆ) வேறு மோட்டார் வாகனங்களின் கொடுக்கல் வாங்கல் பெறுமதியானது ஒத்த அல்லது அத்தகைய வாகனத்தினை ஏற்றுமதி செய்யும் நாட்டில் குறிப்பிட்ட புதிய ரக வாகனத்தின் கொடுக்கல் வாங்கல் பெறுமதியின் 82.5 சதவீதத்திற்கு குறைவாக இருத்தல் கூடாது.

2016 மே 27 - மோட்டார் வாகன இறக்குமதி மீதான கலால் வரியின் அலகு வீதம் திருத்தப்பட்டது.

2016 யூன் 14 - 2016 யூன் 14இல் வெளியிடப்பட்ட வர்த்தமானி இல. 1971/10 ஆல் 25 மே 2016 இல் வெளியிடப்பட்ட வர்த்தமானி இல. 1968/11 நீக்கப்பட்டதுடன் மோட்டார் வாகனத்தின் சுங்கப் பெறுமதிகளின் கணிப்பீடுகளின் முறை பின்வருமாறு திருத்தப்பட்டது (வகை (i) (ஆ)):

கொடுக்கல்வாங்கல் பெறுமதியானது ஒத்த அல்லது அத்தகைய வாகனத்தினை ஏற்றுமதி செய்யும் நாட்டில் குறிப்பிட்ட புதியரக வாகனத்தின் கொடுக்கல்வாங்கல் பெறுமதியின் 85 சதவீதத்திற்கு குறைவாக இருத்தல் கூடாது.

மேலும், வாகனம் இலங்கை துறைமுகத்தை வந்தடையும் வரையில் கொள்வனவாளருக்கு ஏற்பட்ட தரகர்கூலி மற்றும் விற்பனைத் தரகு போன்றவை (வகை (5)) மோட்டார் வாகனத்தின் சுங்கப் பெறுமதியினை கணிப்பீடு செய்வதில் உள்ளடக்கப்படும்.

2016 ஓகத்து 27 - டீசல் மீதான கலால் வரி லீற்றருக்கு ரூ. 3 இலிருந்து ரூ. 13 இற்கு அதிகரிக்கப்பட்டது.

**அடுத்து வருபவை** - பாராளுமன்றத்துக்கு பெறுமதி சேர் வரி (திருத்த) சட்டமூலம் மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (திருத்த) சட்டமூலம் என்பன சமர்ப்பிக்கப்படும்.

## அரச செலவினம்

2016 பெப்புருவரி 25 - 2016 சனவரி 01 முதல் அமுலுக்கு வரும் வகையில் ஐந்து பகுதிகளாக பொதுப் பணி சேவைகளுக்கான சம்பள அளவீடுகளை அமுல்படுத்துவதற்கு பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 03/2016 வெளியிடப்பட்டது.

2016 மாச்சு 09 - நெல் விவசாயிகளுக்கான உர மானியத்திற்கு பதிலாக பண உதவு தொகையாக வருடத்திற்கு அதிகபட்சமாக 2 ஹெக்டேயர்களுக்கு ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் அதிகபட்ச பணமாக ரூ.25,000 வழங்குவதற்கு சுற்றறிக்கை இல. 2016 NFS/FCG(1) வெளியிடப்பட்டது.

2016 மே 01 - 2016 சனவரி 01 இற்கு பிறகு ஓய்வுபெற்ற அலுவலர்களுக்கான புதிய காப்புறுதி திட்டமான "அக்றகாற றெக்கவறண" இனை ஸ்தாபிப்பதற்கு ஓய்வூதிய சுற்றறிக்கை இல. 04/2016 வெளியிடப்பட்டது.

2016 மே 03 - தேயிலை, தெங்கு மற்றும் இறப்பர் உரமானியத்திற்கு பதிலாக வருடமொன்றிற்கு ஹெக்டேயர் ஒன்றிற்கு முறையே ரூ. 15,000 , ரூ. 9,000 மற்றும் ரூ. 5,000 பண உதவு தொகை வழங்குவதற்கு ஒரு சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

## படுகடன் முகாமைத்துவம்

2016 சனவரி 07 - 2016 இற்கான இலங்கை அபிவிருத்தி முறிகளின் வழங்கல் ஐ.அ.டொலர் 2,500 மில்லியனாக வரையறை செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டது.

2016 பெப்புருவரி 16 - 2013 ஓகத்து 01இல் வழங்கப்பட்ட லங்கா செட்டில் முறைமை விதிகள் (பதிப்பு 2.1) உடன் அவர்களின் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது இணைந்து ஒழுகுகிறார்களா என்பதனை உறுதிப்படுத்துவதற்கு லங்கா முறைமையின் அனைத்து பங்குபற்றுநருக்கும் "லங்கா செகுயர் மத்திய வைப்பிடல் முறைமையில் அரச பிணையங்களின் உரிமையினைப் பதிவு செய்தல்" மீதான சுற்றறிக்கையொன்று வழங்கப்பட்டது.

2016 மாச்சு 13 - இலங்கை அபிவிருத்தி முறிகள் மீதான ஆகக் குறைந்த முதலீட்டு தொகையானது ஐ.அ.டொலர் 100,000 இலிருந்து ஐ.அ.டொலர் 10,000 இற்கு குறைக்கப்பட்டது.

2016 ஏப்பிறல் 07 - உள்ளூர் திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம், பதிவுசெய்யப்பட்ட பங்கு மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் மற்றும் வேறு தேவையான ஒழுங்குகள் மற்றும் சட்டங்களினதும் அடிப்படையில் முதனிலை வணிகர்கள் மற்றும் வேறு பங்குபற்றுநர்களுடன் தொடர்பான இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குபடுத்தல்களும் மேற்பார்வை தொழிற்பாடுகளும் பொதுப்படுகடன் கண்காணிப்பாளர் மற்றும் பதிவாளரிடமிருந்து இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களை மேற்பார்வை செய்யும் திணைக்களப் பணிப்பாளருக்கு ஒப்படைக்கப்பட்டது.

2016 ஓகத்து 01 - இலங்கைக்காக வடிவமைக்கப்பட்டுள்ள நிலையான வருமான விலைக்குறிப்பிடல் அடிப்படையிலான புளும்பேர்க் வர்த்தக கட்டமைப்பினை பயன்படுத்துமாறு அனைத்து முதனிலை வணிகர்களையும் கேட்டுக்கொள்ளும் சுற்றறிக்கையின் வழங்கல்;

- அனைத்து முதனிலை வணிகர்களுக்கிடையிலான உடனடி வர்த்தகத்தை மேற்கொள்வதற்கு
- முதனிலை வணிகரல்லாத முதலீட்டாளருடன் ரூ. 50 மில்லியனுக்கு மேற்பட்டதாக கருமபீடத்திலே செய்யப்பட்ட அனைத்து உடனடி வர்த்தகத்தின் விளைவு வீதங்களும், வர்த்தக அளவுகளும் ஒவ்வொரு 30 நிமிடங்களில் பதிவு செய்யப்படும்.

2016 செத்தெம்பர் 15 - அனைத்து உரிமம் பெற்ற வணிக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளுக்கும் 2016 ஓகத்து 01 இல் வழங்கப்பட்ட சுற்றறிக்கையானது பின்வரும் கோரிக்கைகளுடன் விரிவுபடுத்தப்பட்டது;

- ஏனைய வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்களுடனும் அனைத்து உடனடி வர்த்தகத்தினையும் மேற்கொள்ளல் மற்றும்
- கருமபீடத்தில் மேற்கொள்ளப்பட்ட ரூ. 50 மில்லியனுக்கு மேற்பட்ட அனைத்து உடனடி வர்த்தகங்களது விளைவு வீதங்களும் வர்த்தக அளவுகளும் ஒவ்வொரு 30 நிமிடங்களில் பதிவு செய்யப்படும்.

## நாணயத் துறை

2016 சனவரி 16 - உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் அனைத்து ரூபா வைப்புப் பொறுப்புக்கள் மீதும் பிரயோகிக்கப்படும் நியதி ஒதுக்கு வீகிதம் 1.50 சதவீதப் புள்ளிகளினால் 6.00 சதவீதத்திலிருந்து 7.50 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது.

2016 பெப்புருவரி 19 - துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் என்பன முறையே 6.50 சதவீதம் மற்றும் 8.00 சதவீதத்திற்கு 50 அடிப்படைப் புள்ளிகளினால் அதிகரிக்கப்பட்டன.

2016 யூலை 28 - துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் என்பன முறையே 7.00 சதவீதம் மற்றும் 8.50 சதவீதத்திற்கு 50 அடிப்படைப் புள்ளிகளினால் அதிகரிக்கப்பட்டன.

## நிதியியல் துறை

### உரிமம் பெற்ற வங்கிகள்

2016 சனவரி 25 - இணையத்தள பாதுகாப்பு அச்சுறுத்தல் நிகழ்வுகளின் மீதான தகவல்களை கண்டறியப்பட்ட திகதியிலிருந்து தொழிற்படும் ஒரு அலுவலக நாளுக்குள்ளும் ஒவ்வொரு காலாண்டு முடிவிலிருந்து 15 நாட்களுக்குள்ளும் கண்காணிப்பு நோக்கத்திற்காக இலங்கை மத்திய வங்கியின் வங்கித் தொழில் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு வழங்குவதற்குமாறு அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் அறிவுறுத்தப்பட்டது.

2016 பெப்புருவரி 01 - முறையியல் முக்கியத்துவம் வாய்ந்த கொடுப்பனவு முறையூடாக நடைமுறைப்படுத்தப்பட்ட நிதிய மாற்றங்களுக்காக வாடிக்கையாளர்களிடமிருந்து அறவிடப்பட்டகட்டணத்தினை அனைத்து வங்கிக் கிளைகளிலும் காட்சிப்படுத்துவதற்கும் வங்கியின் இணையத்தளத்தில் வெளிக்காட்டுவதற்கும் அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளும் கேட்டுக்கொள்ளப்பட்டன.

**அடுத்து வருபவை** - பாசல் III இன் கீழ் உரிமம் பெற்ற வங்கிகளுக்கான குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடு மற்றும் திரவத்தன்மை விகிதத்தின் அமுலாக்கம்.

### ஏனைய நிதியியல் நிறுவனங்கள்

2016 சனவரி 18 - உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் புதிய கிளைகள் மற்றும் தன்னியக்க கூற்றுப் பொறிகளை ஆரம்பித்தல், கிளைகள் மற்றும் பணி நிலையங்களை மூடி விடுதல் மற்றும் வேறு இடங்களில் அமைத்தல் என்பன தொடர்பில் ஏற்கனவேயுள்ள கொள்கைகளையும் நடைமுறைகளையும் வலுப்படுத்தல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

**அடுத்து வருபவை** - உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் மீதான கீழ்வரும் பணிப்புரைகள் திருத்தப்படும்

- குறைந்தளவு மைய மூலதனத் தேவைப்பாடு
- இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதன போதுமாந்தன்மை விகிதம்
- கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான வகைப்படுத்தல் மற்றும் இழப்பீடு/ ஒதுக்கீடு
- வருடாந்த மற்றும் இடைக்கால நிதியியல் கூற்றுக்களைத் தயாரித்தல், முன்மொழிதல் மற்றும் வெளியிடுதல்
- வைப்புக்கள் மற்றும் கடன் பத்திரங்களின் உயர்ந்தபட்ச வட்டிவீத வரையறையை கணிப்பிடுவதில் பயன்படுத்தப்பட்ட முறைமைகள்.

## ஏனையவை

2016 சனவரி 01 - பங்கு கொடுக்கல் வாங்கலுக்கான தீர்வை நீக்கப்பட்டது.

- 2016 சனவரி 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் இலங்கை காப்புறுதி சபையானது அனைத்து காப்புறுதி கம்பனிகளும் இணங்கி நடப்பதற்கு கடன் தீர்ப்பனவாற்றல் அளவு (இடர்நேர்வை அடிப்படையாகக் கொண்ட மூலதனம்) ஒழுங்குவிதிகளை வழங்கியது.

2016 சனவரி 04 - 50 சதவீதத்திற்கு மேற்பட்ட பங்குகளை சொந்தமாக வைத்திருத்தல் மற்றும் கட்டுப்பாட்டினைக் கொண்டிருத்தல் என்பனவற்றின் மீதான மாற்றங்களுக்கு இலங்கை காப்புறுதிச் சபையிடமிருந்து ஒப்புதல் பெறுவதற்கு அனைத்து காப்புறுதியாளர்கள் மற்றும் தரகர்களுக்கு காப்புறுதி தொழில்துறைக்கான ஒழுங்குவிதிகள் சட்டத்தின் பகுதி 96அ இன் கீழான அறிவுறுத்தலொன்று இலங்கை காப்புறுதி சபையினால் வழங்கப்பட்டது.

2016 சனவரி 06 - அமைச்சரவையினால் ஒப்புதலளிக்கப்பட்ட பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலுக்கெதிரான தேசிய கொள்கையொன்று ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2016 சனவரி 07 - தேசிய வேளாண்மை வியாபார அபிவிருத்தி செயற்றிட்டத்தின் நுண்பாக நிதியியல் கூறுகளை மீள ஆரம்பிப்பதற்கு நாடுமுழுவதும் ரூ.90 மில்லியனை பகிர்ந்தளிப்பதற்காக பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கு தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

2016 சனவரி 14 - வர்த்தக அளவிலான பாற்பண்ணை அபிவிருத்தி கடன்திட்டத்தின் கருணைக் காலமானது செயற்றிட்டத்தின் தேவைப்பாடுகளினடிப்படையில் 06 மாதங்களிலிருந்து 12 மாதங்களிற்கு அதிகரிக்கப்பட்டது.

2016 சனவரி 27 - 2016 இன் 1ஆம் இலக்க நிதியியல் நிறுவனங்கள் ஒழுங்கு விதிகள் (வாடிக்கையாளர்கள் நெருங்கிய கண்ணோட்ட ஒழுங்கு) மீதான 1951/13 இலக்க அதிவிசேட வர்த்தமானி நிதியியல் நிறுவனங்களிற்கு வழங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 2016 மாச்சு 15 | - | இலங்கை காப்புறுதி சபையானது காப்புறுதியாளர்களின் காப்புறுதியினை ஏற்கும் அறிவித்தலினை 7 நாட்களிலிருந்து 14 நாட்களுக்கு அதிகரித்தது. |
| 2016 ஏப்பிறல் 01 | - | முன்மொழியப்பட்ட காப்புறுதி ஒப்பந்தத்தின் வரையறைகளையும் நிபந்தனைகளையும் பரீட்சிப்பதற்காக வருங்கால ஆயுட் காப்புறுதியாளர்களுக்கான குறைந்தபட்சம் 21 நாட்களைக் கொண்ட இலவச பார்வையிடும் காலத்தினை இலங்கை காப்புறுதி சபை அறிமுகப்படுத்தியது. |
| | - | பங்கு கொடுக்கல் வாங்கல் மீதான தீர்வை 0.3 சதவீதத்திற்கு மீள விதிக்கப்பட்டது. |
| 2016 ஏப்பிறல் 28 | - | சுயதொழில் ஊக்குவிப்பு முயற்சிக்கடன் திட்டம் - கட்டம் II இனை நடைமுறைப்படுத்துவதற்கு தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. |
| 2016 மே 20 | - | 2016இன் 6ஆம் இலக்க நுண்பாக நிதிச் சட்டம் இயற்றப்பட்டது;<br>- நுண்பாக வியாபாரத்தினை நடாத்தும் கம்பனிகளிற்கு உரிமம் வழங்குதல், ஒழுங்கமைத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்<br>- அரச சார்பற்ற நுண்பாக நிதி அமைப்புக்களைப் போன்ற வரையறுக்கப்பட்ட சேமிப்பு வைப்புக்களை ஏற்கும் அரச சார்பற்ற அமைப்புக்களினைப் பதிவு செய்தல்.<br>- அரச சார்பற்ற நுண்பாக நிதி அமைப்புக்கள் மற்றும் அரச சார்பற்ற சிறுகடன் அமைப்புக்களின் ஒழுங்கமைத்தல் மற்றும் மேற்பார்வை செய்தலுக்கான விதிமுறைகளை அமைத்தல் |
| 2016 யூலை 28 | - | தேசிய வேளாண்மை வியாபார அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் தொழிற்படுத்தப்பட்ட "தருண திரிய" இளைஞர் மேம்படுத்தல் மற்றும் தொழில்வாய்ப்பு திட்டத்தின் உருவாக்கத்திற்காக பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. |